## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்–2 முதல் 15 வயது வரையுள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு வாரம் ஒரு முட்டை வழங்கும் திட்டத்திற்கு மாற்று ஏற்பாடு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் (ச.உ.தி–2) துறை

அரசாணை (நிலை) எண்.99 — நாள். 12-09-2001

**படிக்கப்பட்டது**

1. அரசாணை (நிலை) எண். 499, பிற்பட்டோர் நலம் (ம) சமூகநலத் துறை, நாள் 26-5-89.
2. அரசாணை (நிலை) எண். 73, சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் 27-4-98.

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2 முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு குழந்தைக்கும் சத்துணவுடன் ஒரு முட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் இத்திட்டம் குழந்தை ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு ஒரு முட்டை வழங்க மாற்றி அமைக்கப்பட்டு ஆணையிடப்பட்டது. 71,693 குழந்தைகள் நல மையங்கள், ஊரகப் பள்ளி மையங்கள் மற்றும் நகர்ப்புறப் பள்ளி மையங்களில் சத்துணவு உண்ணும் சுமார் 72.98 லட்சம் குழந்தைகளுக்கு இத்திட்டத்தின்கீழ் முட்டை வழங்கப்படுகிறது.

2. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் தற்சமயம் முட்டை வழங்கும் முறையில் அதிருப்தி நிலவுவதால், இத்திட்டத்தைக் கைவிட்டு அதற்கு மாற்று ஏற்பாடு ஒன்றை அறிமுகப்படுத்துவது குறித்து அரசு தீவிரமாக ஆய்வு செய்தது. இப்பொருள் தொடர்பாக அரசுக்குப் பரிந்துரைக்க கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், தோட்டக்கலை ஆணையர், சமூக நல ஆணையர் ஆகிய அலுவலர்கள் அடங்கிய குழுவொன்றும், திரு ஜி.என்.வி. பிரம்மன், உதவி இயக்குநர், தேசிய ஊட்டச்சத்து நிறுவனம், ஐதராபாத், மருத்துவ கல்வி இயக்குநரால் பரிந்துரைக்கப்பட்ட உணவுத் திட்ட நிபுணர் (Dietician), சமூக நல ஆணையர், திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்–3

ஆகிய உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்றும் அமைக்கப்பட்டன. இக்குழுவில் உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியத்தின் சென்னை மண்டலத்தில் பணியாற்றும் துணை தொழில்நுட்ப ஆலோசகரும், உதவித்தொழில்நுட்ப ஆலோசகரும் சேர்க்கப்பட்டு விவாதத்தில் பங்கு பெற்றனர். இக்குழுக்கள் மேற்கண்ட பொருள் தொடர்பான தங்கள் பரிந்துரைகளை விரிவான அறிக்கைகள் மூலமாக அரசுக்கு சமர்ப்பித்தனர்.

3. குழுவின் பரிந்துரையை கவனமாக பரிசீலித்து இதனை கொள்கை அளவில் ஏற்றுக்கொள்வதென அரசு முடிவு செய்தது – அரசின் இந்த முடிவினை சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 6.8.2001 –ல் நடைபெற்ற துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது அறிவித்தார். அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து அரசு கீழ்க்கண்ட ஆணைகளை வெளியிடுகிறது –

அ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் வாரம் ஒன்றுக்கு ஒரு குழந்தைக்கு வழங்கப்பட்டு வரும் ஒரு முட்டைக்கு மாற்றாக ஒவ்வொரு குழந்தைக்கும் வாரத்தில் ஏதேனும் மூன்று நாட்களில் முறையே ஒரு நாள் 20 கிராம் உருளைக்கிழங்கு மற்றொரு நாள் 20 கிராம் கருப்பு கொண்டைக்கடலை (முழு உருவில்) மற்றும் பிறிதொரு நாள் 20 கிராம் பச்சைப்பயறு (முழு உருவில்) ஆகியவற்றை சமைத்து சத்துணவுடன் சேர்த்து வழங்க ஆணையிடப்படுகிறது. இந்த ஏற்பாடு ஒவ்வொரு வாரமும் செயல்படுத்தப்பட வேண்டும்.

(ஆ) குழந்தைகளுக்குத் தேவைப்படும் நாட்களுக்கு உருளைக் கிழங்கினை மொத்தமாக வெளிச்சந்தையிலிருந்து சத்துணவு அமைப்பாளர்கள் பெற்றுக் கொள்ளலாம். இதற்காக குழந்தை ஒன்றுக்கு வாரத்தில் ஏதாவது ஒரு நாளில் 20 கிராம் உருளைக்கிழங்கினைச் சமைத்து சத்துணவுடன் சேர்த்து ஒரு முறை வழங்கிட ரூ. 0.16 நிர்ணயம் செய்து ஆணையிடப்படுகிறது.

(இ) தற்சமயம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் உணவு தானியங்கள் மற்றும் பருப்பு ஆகியவற்றைக் கொள்முதல் செய்து வழங்கிவரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், குழந்தைகளுக்குத் தேவையான கருப்பு கொண்டைக்கடலை (முழு உருவில்) மற்றும் பச்சைப்பயறு (முழு உருவில்) ஆகியவற்றைக் கொள்முதல் செய்து சத்துணவுக் கூடங்களுக்கு வழங்க அனுமதி அளிக்கப்படுகிறது. தற்போதைய நடைமுறையைப் பின்பற்றி இப்பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்வது குறித்த செயற்குறிப்பை அரசுக்கு அனுப்புமாறு தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஈ) தற்சமயம் குழந்தைகளுக்கு சத்துணவுடன் வழங்கப்பட்டுவரும் முட்டைக்கு

மாற்று ஏற்பாடாக உருளைக்கிழங்கு, கருப்பு கொண்டைக்கடலை (முழு உருவில்) மற்றும் பச்சைப்பயறு (முழு உருவில்) ஆகியவற்றைச் சமைத்து சத்துணவுடன் வழங்கும் திட்டத்தினை தற்போது முட்டை வழங்கி வரும் ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தம் முடிவடைந்த மறுநாள் முதற்கொண்டு இப்புதிய திட்டத்தை மாவட்டங்கள் அனைத்திலும் செயல்படுத்திட வேண்டுமென சம்பந்தப்பட்ட துறைத்தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4.மேற்காணும் மாற்றுத் திட்டத்திற்கு ஏற்படும் மொத்தச் செலவின விவரம், அச்செலவினம் பற்று வைக்கப்பட வேண்டிய கணக்குத் தலைப்புகள் குறித்து ஆணைகள் தனியே வெளியிடப்படும். இது தொடர்பாக, தேவையான கருத்துருவினை ஆணையர், சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்-III ஆகியோர் அரசுக்கு உடனடியாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

5. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண் 482 / DS (TK) / 2001 நாள் 11-09-2001ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷீலாபாலகிருஷ்ணன்
அரசு செயலாளர்

பெறுநர்
சமூக நல ஆணையர், சென்னை-5
திட்ட ஒருங்கிணைப்பாளர்,
உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்-III, சென்னை 20
ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை-15
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை-10.
தோட்டக்கலை ஆணையர், சென்னை-5.
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம்,
சென்னை-10.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அதிகாரிகள்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை
மாநிலக் கணக்காயர், சென்னை-35/18/(பெயரிடப்பட்ட கவரில்)
தல நிதிக் கணக்கு ஆய்வாளர், சென்னை.

நகல்:
நிதி, ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை.

192

கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை–9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறைச்
செயலரின் தனிச் செயலர், சென்னை–9.
அமைச்சர் (சமூக நலம்) அவர்களின் முதுநிலை
உதவியாளர், சென்னை–9.
முதலமைச்சரின் செயலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்கள் .

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்